கனம் முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருமங்கலம்
முன்னிலை : திரு. E.மணிகண்டன், B.A., B.L.,
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,(FAC)
திருமங்கலம்.

2026–ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 27ம் நாள், வெள்ளிக்கிழமை
இடைநிலை மனு எண்.6/2026
இன்
இடைநிலை மனு எண்.903/2018
இன்
அசல் வழக்கு எண்.49/2009
* * * *

1) ஆறுமுகம்(இறப்பு)
2) ராஜாமணியம்மாள்(இறப்பு)
3) சுப்புலெட்சுமி (இறப்பு)
4) சாந்தி
5) முருகன்
6) தமிழ்செல்வி ... மனுதாரர்கள்/மனுதாரர்கள்/வாதிகள்

/ எதிரிடை /

1) ஜனாப் நல்லமுகமது
2) ஜனாப் மைதீன்(இறப்பு)
3) மலர்விழி
4) கண்ணன்
5) அண்ணாதுரை
6) கிருஷ்ணன்

7) சுவீபா என்ற கவிதா பீவி
8) ரமலான் ... எதிர்மனுதாரர்கள்/எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகள்

இறுதியாக இம்மனுவானது 19.02.2026ல் இந்நீதிமன்றத்தில் இறுதி விசாரணைக்காக வந்த போது, மனுதாரர்கள்/ வாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.M.பொன்னம்பலம் அவர்கள் ஆஜராகியும், 1ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் திரு.A.M.செந்தில்குமார் அவர்கள் ஆஜராகியும், 3 முதல் 8 வரையிலான எதிர்மனுதாரர்கள் ஒருதலைபட்சமாக்கப்பட்டும், 2ம் எதிர்மனுதாரர் இறந்துவிட்ட நிலையில், இதுநாள் வரை இந்நீதிமன்றத்தின் சீரிய பரிசீலனையில் இருந்து வந்து சாட்சியம் மற்றும் சான்றாவணங்கள் பரிசீலிக்கப்பட்டு இறுதியாக இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

**உத்தரவு**

இம்மனுவானது அசல் வழக்கில் நீதிமன்ற ஆணையர் கடந்த 18.12.2023ம் தேதி தாக்கல் செய்த அறிக்கையில், வழக்கு சொத்து சம்பந்தப்பட்ட பிரச்சனைக்கு தீர்வு காணும் விதமாக அறிக்கை இல்லை என்றும், எனவே நீதிமன்ற ஆணையர் மீண்டும் வழக்கு சொத்தை

அளந்து அறிக்கை சமர்பிக்க வேண்டும் என்று கட்டளை 26 விதி 10(3)ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1. இம்மனுவில் தீர்மானிக்கவேண்டிய பிரச்சனை என்னவென்றால், மனு சட்டப்படி நிலைக்கத்தக்கதா? இல்லையா? என்தேயாகும்.**

1.1) மனுதாரர்கள்/வாதிகள் தரப்பு மனுவில், அசல் வழக்கில் நீதிமன்ற ஆணையர் கடந்த 18.12.2023ம் தேதி தாக்கல் செய்த அறிக்கையில், வழக்கு சொத்து சம்பந்தப்பட்ட பிரச்சனைக்கு தீர்வு காணும் விதமாக அறிக்கை இல்லை என்றும், எனவே நீதிமன்ற ஆணையர் மீண்டும் வழக்கு சொத்தை அளந்து அறிக்கை சமர்பிக்க வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

1.2) எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்துள்ள எதிருரையில், மனுதாரர்கள்/வாதிகளின் இம்மனுவினை எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளின் செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யவேண்டும் என்று ஆட்சேபணை செய்யப்பட்டுள்ளது.

**2) தீர்வு:-**

2.1) வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்ததில், தாவா சந்து வாதிகளுக்கும், 3 முதல் 5 பிரதிவாதிகளுக்கும் பாத்தியப்பட்ட தனித்த சந்து என விளம்புகை பரிகாரம் கோரியும், அதன் தொடர்ச்சியாக தாவாச்

சந்தில் பிரதிவாதிகள் எவ்வித ஆக்கிரமிப்பும் செய்யக்கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும், தாவாச் சந்தில் 1, 2 பிரதிவாதிகள் ஆக்கிரமிப்பாக கட்டியுள்ள மேற்கோப்புகளை அகற்றி கொடுக்கும்படி செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும், தாவா சந்தை ஒட்டி 1ம் வாதியின் சுவற்றில் உள்ள மழை தண்ணீர் விழும் தூம்பில் உள்ள அடைப்பை 1, 2 பிரதிவாதிகள் அகற்றி கொடுக்கும்படி செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும் அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2.2) இந்நிலையில், மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில், அசல் வழக்கில் ஏற்கனவே I.A.No.903/2018ல் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட ஆணையர் அறிக்கையில், பிரதிவாதிகளின் சொத்தின் எல்லைகளை சர்வேயர் நிர்ணயம் செய்யவில்லை என்றும், பிரதிவாதிகளின் சொத்தின் எல்லைகளை நிர்ணயிக்காமல், பாதை எனக் குறிக்கப்பட்ட பகுதியில் ஏதேனும் ஆக்கிரமிப்பு இருந்தால் அதை கண்டுபிடிக்க முடியாது என்றும் குறிப்பிட்டுள்ளார். எனவே, வழக்கு சொத்து சம்பந்தப்பட்ட பிரச்சனைக்கு தீர்வு காணும் விதமாக அறிக்கை இல்லை என்றும், எனவே நீதிமன்ற ஆணையர் மீண்டும் வழக்கு சொத்தை அளந்து அறிக்கை சமர்பிக்க வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2.3) இம்மனுவினை அனுமதிப்பதால், மேற்படி அசல் வழக்கு விசாரணைக்கு அது உரிய நடவடிக்கையாக இருக்கும் என்பதை கருத்தில் கொண்டும், எனினும் புதிய நீதிமன்ற ஆணையரை நிர்ணயம் செய்வது தான் சட்டப்படியானது என்பதை கருத்தில் கொண்டும், இம்மனுவினை அனுமதிப்பதினால் இருதரப்பில் எவ்வித பாதகமும் ஏற்படபோவதில்லை என்பதை கருத்தில்கொண்டும், மேற்படி I.A.No.903/2018ல் ஆணையர் தாக்கல் செய்த அறிக்கையினை நீக்கரவு செய்வது சட்டப்படியானது என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

**முடிவாக,** இம்மனு பகுதியாக அனுமதித்து இந்நீதிமன்றத்தால் உத்தரவிடப்படுகிறது. அதன்படி, 18.12.2023ல் தாக்கல் செய்த நீதிமன்ற ஆணையர் அறிக்கை மற்றும் வரைபடம் இரத்து செய்தும், மேற்படி வழக்கு சொத்தினை மீண்டும் அளவீடு செய்ய கற்றறிந்த வழக்கறிஞர் திருமதி.காளீஸ்வரி என்பவர் நீதிமன்ற ஆணையராக நியமனம் செய்யப்படுகிறார். மேற்படி நீதிமன்ற ஆணையரின் கட்டணமாக ரூ.8,000/– நிர்ணயம் செய்யப்படுகிறது. மேற்படி நீதிமன்ற ஆணையருக்கான கட்டணத்தை இவ்வுத்தரவு பிறப்பிக்கப்பட்ட 10 தினங்களுக்குள் நீதிமன்ற ஆணையர் வசம் நேரடியாக வழங்க வேண்டும் என்றும், மேற்படி, நீதிமன்ற ஆணையர் வழக்குச்சொத்தினை

சம்பந்தப்பட்ட சர்வேயர் மற்றும் கிராம நிர்வாக அதிகாரியின் துணைக்கொண்டு சட்ட விதிகளுக்கு உட்பட்டு இருதரப்பில் வழங்கும் ஆவணங்களின் அடிப்படையிலும் அளவீடு செய்து நீதிமன்ற ஆணையர் அறிக்கை மற்றும் வரைப்படத்தை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய உத்தரவிடப்படுகிறது. ஆணையர் அறிக்கை மற்றும் வரைப்படத்தினை தாக்கல் செய்ய திரும்ப அழைக்க நாள்: 12.03.2026.

இவ்வுத்தரவானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு இந்த திறந்த நீதிமன்ற அவையில் 2026ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 27ம் நாள் அவையறிய பகரப்பட்டது.

ESWARAN MANIKANDAN
Digitally signed by ESWARAN MANIKANDAN
Date: 2026.02.27 17:22:19 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,(FAC)
திருமங்கலம்.

**இணைப்பு:–**

1. **மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்** : இல்லை
2. **எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:** இல்லை

ESWARAN MANIKANDAN
Digitally signed by ESWARAN MANIKANDAN
Date: 2026.02.27 17:22:26 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,(FAC)
திருமங்கலம்.

இடைநிலை மனு எண்.6/2026
இன்
இடைநிலை மனு எண்.903/2018
இன்
அசல் வழக்கு எண்.49/2009
வரைவு/செவ்வை உத்தரவு
நாள்:27.02.2026